முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1467

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.10.2023,** வியாழக்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
   கலியினை மீட்டு மக்களுக்கு ஞானமாக
   வரமாகத் தந்து தர்ம பலம் கொண்டு
   வையகத்தில் எங்கும் தர்ம ஞான ஆட்சி நிகழ
2. நிகழவே அவதாரம் புரிந்த
   நீதியே ஆறுமுகன் என் அவதாரமே
   பெருமைகொண்டு ஆறுமுகன் யான் உந்தனுக்கு
   புகலுவேன் ஞான அறிவுரை ஆசி

   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 18 ம் நாள், 05.10.2023, வியாழக்கிழமை)
3. ஆசியதும் அரங்கன் சக்தி அகிலமெல்லாம்
   அறமாகப் பரவி வருவதாலே
   ஆசிபெற்ற அரங்கன் தொடர்புகூட்டி
   அகிலத்தில் ஞானம் பயிலுபவர்களே
4. ஆற்றல்மிக்க ஞானவான்களாக
   அகிலத்தையே மாற்றும் ஞானிகளாக மாற்றம் பெறுவர்
   மாற்றத்தைத் தரும் மகா சக்தி அரங்கஞானிதான்
   மண்ணுலகை மீட்கவல்ல மகா சபை அரங்கன் பிரணவக் குடில்தான்
5. குடில் தொடர்புகொண்டு ஞானம் பயின்றால்
   குரு அரங்கன் வழி திருவருள் பெற்று
   இடரில்லாத பெருவாழ்வாய்
   இந்த யுகத்தையே வெல்லுகின்ற
6. மாவரம் பெற்று உலகோர் மாமனிதனாக
   மண்ணுலகை மாற்றவல்ல மகான்களாக
   மரணம் வெல்லும் மகா சக்திகளாகத் தேறி
   உலகோர் யுகமாற்றம் புரிவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—